மதிப்புக்குரிய வாடிக்கையாளருக்கு,

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட வாடிக்கையாளர் பட்டயத்தின் கீழான வேண்டுகோள் ஒன்றுக்கு ஏற்ப, நாம் பிரதான தகவல் ஆவணங்களின் (Key Fact Document) தொடர் ஒன்றைதயாரித்திருக்கின்றோம் என்பதோடு அவை நாம் வழங்குகின்ற வங்கி உற்பத்திகள்/சேவைகளைத் தெரிவு செய்வதற்கு உங்களுக்கு உதவியாக இருக்கும் என கருதுகின்றோம் என்பதோடு அவை உங்களுக்கு தேவையானதும் மற்றும் பொருத்தமானதுமாகும்.

இந்த பிரதான தகவல் ஆவணம் தனிப்பட்ட வங்கியியலுக்காக நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியில் இருக்கக் கூடிய கணக்கு தொடர்பான விசேட பொதிகள் மற்றும் தனியார் வெளிநாட்டு நாணய கணக்குகள் என்பவற்றுடன் பல்வேறு வகைகளிலான இலங்கை ரூபாய் கணக்குகள் என்பவற்றின் ஒரு விரிவான விபரத்தை உங்களுக்கு வழங்குகின்றது.

எவ்வாறாயினும், கீழே பிரதான தகவல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட தகவல்கள், வங்கியின் சட்டரீதியான மற்றும் ஒழுங்குறுத்துகை ரீதியான மாற்றங்கள் மற்றும் கொள்கைகள் மற்றும் படிமுறைகளில் மாற்றங்கள் என்பவற்றுக்கு ஏற்ப, திருத்தப்பட வேண்டியதாகும்.

உங்களுக்கு இது தொடர்பில் மேலதிக தகவல்களை அறிந்து கொள்ள வேண்டியிருந்தால், பின்வரும் முறைகளில் எம்மைத் தொடர்பு கொள்ளவும். www.nationstrust.com அல்லது 24 மணித்தியால அழைப்பு நிலையம்: 011-4711411.

கீழே தரப்பட்ட எவையேனும் உங்கள் கணக்குகள் தொடர்பில் ஏதேனும் முறைப்பாடு உங்களுக்கு இருக்கின்ற சந்தர்ப்பத்தில், முறைப்பாட்டு அறிவித்தல் உள்ளடங்கிய ஒரு சுருக்கமான எழுத்து மூல அறிக்கையொன்றை பின்வரும் முறையில் எமக்கு அனுப்பி வையுங்கள்: முறைப்பாடுகள் தீர்க்கும் அதிகாரி, நேஷன்ஸ் ட்ரஸ்ட் பேங்க் பீடில்சீ, 242,யூனியன் பிளேஸ், கொழும்பு 02. அல்லது தொலைபேசியின் ஊடாக எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்: [+94(0)11 4711411] மின்னஞ்சல் [customerservice@nationstrust.com] அத்தோடு நாம் உங்களுக்கு விரைவில் மறுமொழி வழங்குவோம்.

| கணக்கு தொடர்பான விபரம் | வாடிக்கையாளர்களுக்கான அனுகூலங்கள் | கட்டணங்களின் வகைகள் மற்றும் ஏனைய வங்கிக் கட்டணங்கள் | கணக்கை ஆரம்பிப்பதற்கு பின்பற்றப்பட வேண்டிய படிமுறைகள் | பிரதான நியதிகள் மற்றும் நிபந்தனைகள் |
|---|---|---|---|---|
| அ) நேஷன்ஸ் ப்ரபுத்தா (Nations Prabuddha) சிரேஷ்ட பிரஜை சேமிப்புக் கணக்கு | | | | |
| இது விருப்பத் தெரிவு வட்டி வீதத்துடன் கூடிய 60 வயதுக்கு மேற்பட்ட தனிநபர்களுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட வட்டியைக் கொண்ட ஒரு கணக்காகும். | • ரூ.5,000 இற்கு மேற்பட்ட நிலுவைகளுக்கு வருடத்திற்கு 4.0% (வ.வ.வி.வீ. 4.0742%) உயர் வட்டி வீதம்<br>• கணக்குக்கு மாற்றல் செய்யப்படுகின்ற மாதாந்த ஓய்வுதியத் தொகையின் ஆகக் குறைந்தது 15 மடங்குகள் வரையிலான கடன் வசதி<br>• கணக்கு நிலுவை அடிப்படையில் வங்கி மேலதிகப்பற்று வசதி<br>• கடன் அட்டை வசதி<br>• நேஷன்ஸ் மாஸ்டர் அட்டை பொருள் கொள்வனவு பற்று அட்டை<br>• வங்கியில் காசுக் கவுன்டர் ஊடாக மீள் பெறுகைக்காக கட்டணங்கள் அறவிடப்படுவதில்லை<br>• உங்கள் வீட்டிலிருந்தே வங்கி சேவையை மேற்கொள்வதற்கான வசதி | • மாதாந்த சராசரிநிலுவை ரூ. 1,000.00 தொகைக்கு கீழ் இருந்தால், மாதாந்தம் ரூ. 50.00 கட்டணம் அறவிடப்படும்.<br>• கணக்கு முடிவுறுத்தல் கட்டணம்<br>• சகல வங்கி வசதிகளுக்கும் நிலையான கட்டணம் ஏற்புடையதாகும் | சேமிப்புக்கான வங்கியின் நிலையான கணக்கு ஆரம்பித்தல் படி வங்களை பூர்த்தி செய்து பின்வரும் ஆவணங்களுடன் வங்கியின் ஏதேனும் கிளைக்கு சமர்ப்பிக்க வேண்டும்:<br>• தேசிய அடையாள அட்டை/ செல்லுபடியான கடவுச் சீட்டின் பிரதியொன்று<br>• தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டில் உள்ளவதிவிட முகவரி மாற்றம் அடைந்தால், முகவரியை உறுதிப்படுத்துவதற்கு ஆவணச் சான்று சமர்ப்பிக்கபட வேண்டும். | • தகவுடைய ஆட்கள்<br>இலங்கையில் வசிக்கின்ற தேசிய அடையாள அட்டையொன்று/ செல்லுபடியான கடவுச் சீட்டொன்றை வைத்திருக்கின்ற 60 வயதுக்கு மேற்பட்ட இலங்கைக் குடிமக்கள்<br>செல்லுபடியான வதிவு வீசா வைத்திருக்கின்ற குடிமக்கள் அல்லாதவர்கள் |

| கணக்கு தொடர்பான விபரம் | வாடிக்கையாளர்களுக்கான அனுகூலங்கள் | கட்டணங்களின் வகைகள் மற்றும் ஏனைய வங்கிக் கட்டணங்கள் | கணக்கை ஆரம்பிப்பதற்கு பின்பற்றப்பட வேண்டிய படிமுறைகள் | பிரதான நியதிகள் மற்றும் நிபந்தனைகள் |
|---|---|---|---|---|
| அ) நேஷன்ஸ் ப்ரபுத்தா (Nations Prabuddha) சிரேஷ்ட பிரஜை நிலையான வைப்பு | | | | |
| இது மாதாந்தம் அல்லது முதிர்ச்சியில் வட்டி வழங்குகின்ற உள்நாட்டு நாணய நிலையான வைப்புக் கணக்கொன்றாகும். | • அவசர மருத்துவ தேவைகளுக்காக வைப்பை மீளப்பெறும் போது சமர்பிக்கப்படும் நிருபனத்துக்கு அமைவாக அபராத வட்டி தள்ளுபடி | • சகல வங்கி வசதிகளுக்கும் நிவையான கட்டணம் ஏற்புடையதாகும் | சேமிப்புக்கான வங்கியின் நிலையான கணக்கு ஆரம்பித்தல் படிவங்களை பூர்த்தி செய்து பின்வரும் ஆவணங்களுடன் வங்கியின் ஏதேனும் கிளைக்கு சமர்ப்பிக்கவேண்டும்:<br>• தேசிய அடையாள அட்டை/ செல்லுபடியான கடவுச் சீட்டின் பிரதியொன்று<br>• தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டில் உள்ளவ திவிட முகவரி மாற்றம் அடைந்தால், முகவரியை உறுதிப்படுத்துவதற்கு ஆவணச் சான்று சமர்ப்பிக்கபட வேண்டும். | • தகவுடைய ஆட்கள்<br>இலங்கையில் வசிக்கின்ற தேசிய அடையாள அட்டையொன்று/ செல்லபடியான கடவுச் சீட்டொன்றை வைத்திருக்கின்ற 60 வயதுக்கு மேற்பட்ட இலங்கைக் குடிமக்கள்<br>செல்லுபடியான வதிவு வீசா வைத்திருக்கின்ற குடிமக்கள் அல்லாதவர்கள் |